பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

13 06 2024 6 45
வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்-</u>

- குவைத்தில் நேரிட்ட தீ விபத்தில் பாதிக்கப்பட்ட இந்தியர்களுக்கு அனைத்து உதவிகளையும் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் திரு நரேந்திர மோடி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.
- விவசாயம் மற்றும் மண்பாண்ட தொழில்களுக்கு தேவைப்படும் மண்ணை நீர்நிலைகளிலிருந்து வட்டாட்சியர் அனுமதியுடன் கட்டணமின்றி எடுத்துக் கொள்ளலாம் என முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.
- தமிழகத்தில் நடப்பு கல்வி ஆண்டில் பொறியியல் படிப்பு மாணவர் சேர்க்கைக்கான ரேண்டம் எண் வெளியிடப்பட்டுள்ளது.
- அருணாச்சல பிரதேச முதலமைச்சராக பிஜேபி-யின் திரு **Pema Khandu** இன்று மீண்டும் பதவியேற்கிறார்.
- உலகக்கோப்பை டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் அமெரிக்கா-வுக்கு எதிரான ஆட்டத்தில் இந்தியா வெற்றிபெற்று சூப்பர் எட்டு சுற்றுக்கு தகுதிபெற்றது,

*--- இனி விரிவான செய்திகள் ---*

**[]<<<>>>[]**

குவைத்தில் நேரிட்ட தீ விபத்தில் பாதிக்கப்பட்ட இந்தியர்களுக்கு அனைத்து உதவிகளையும் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் திரு நரேந்திர மோடி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக தில்லியில் தமது இல்லத்தில் அதிகாரிகளுடன் பிரதமர் ஆலோசனை மேற்கொண்டார்.

உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தமது ஆழ்ந்த இரங்கலையும் அவர் தெரிவித்தார்.

நிவாரண நடவடிக்கைகளை பார்வையிடவும், உயிரிழந்தவர்களின் உடல்களை விரைவாக இந்தியா கொண்டுவர நடவடிக்கை எடுக்கவும், வெளியுறவுத்துறை இணை அமைச்சர் திரு கீர்த்தி வர்தன் சிங்கை குவைத் செல்லுமாறு பிரதமர் அறிவுறுத்தினார்.

உயிரிழந்த இந்தியர்களின் குடும்பங்களுக்கு பிரதமரின் நிவாரண நிதியிலிருந்து இரண்டு லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்றும் அவர் அறிவித்தார்.

குவைத்தின் மங்காஃப் நகரில் தொழிலாளர் குடியிருப்பில் நேரிட்ட தீ விபத்தில் 49 பேர் உயிரிழந்ததாகவும், இவர்களில் 40 பேர் இந்தியர்கள் என தெரிய வந்துள்ளதாகவும் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

50 பேர் காயம் அடைந்திருப்பதாகவும் வெளியுறவுத் கூறியுள்ளது.

தீ விபத்து நேரிட்ட கட்டடத்தில் கேரளா மற்றும் தமிழ்நாட்டைச் சேர்ந்த தொழிலாளர்கள் அதிகம் இருந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த விபத்து தொடர்பான விவரங்களை அறிந்து கொள்வதற்கு குவைத்தில் உள்ள இந்திய தூதரகம் 965-6 5 5 0 5 2 4 6 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என அறிவித்துள்ளது.

இதனிடையே குவைத்தில் உள்ள இந்திய தூதர் திரு ஆதர்ஷ் ஸ்வைகா, காயம் அடைந்தவர்கள் சிகிச்சை பெற்று வரும் மருத்துவமனைகளுக்கு நேரில் சென்று பார்வையிட்டார்.

இந்நிலையில் இந்த தீ விபத்து குறித்து வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கர், குவைத் வெளியுறவு அமைச்சர் திரு அப்துல்லா அலி அல்-யஹ்யாவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்.

இதனிடையே இந்த தீ விபத்தில் தமிழகத்தைச் சேர்ந்த யாராவது பாதிக்கப்பட்டுள்ளனரா என தகவல் சேகரிக்கப்பட்டு வருவதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இந்த விபத்து தொடர்பான விவரங்களை அறிந்து கொள்ள தமிழக அரசும் தொலைபேசி உதவி எண்களை அறிவித்துள்ளது.

தொடர்பு கொள்ள விரும்புவோர்அயலகத் தமிழர் நலத்துறையின், 1800 309 3793, 80 6900 9900, 80 6900 9901 என்ற உதவி எண்களைத் தொடர்பு கொள்ளலாம் என மாநில அரசு கூறியுள்ளது.

[]<<<>>>[]

அருணாச்சல பிரதேச முதலமைச்சராக பிஜேபி-யின் திரு **Pema Khandu** இன்று மீண்டும் பதவியேற்கிறார்.

இட்டாநகரில் உள்ள டோர்ஜிகாண்டு மாநாட்டு மையத்தில் காலை 11 மணிக்கு நடைபெறும் பதவியேற்பு நிகழ்ச்சியில் ஆளுநர் திரு கே டி பர்நாயக் அவருக்கு பதவிப்பிரமாணமும், ரகசிய காப்புறுதியும் செய்து வைக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் மத்திய அமைச்சர்கள் திரு அமித்ஷா, திரு ஜெ பி நட்டா, பிஜேபி பொதுச்செயலாளர் திரு பி எல் சந்தோஷ் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

[]<<<>>>[]

தமிழகத்தில் நடப்பு கல்வி ஆண்டு பொறியியல் படிப்பு மாணவர் சேர்க்கைக்கான ரேண்டம் எண் நேற்று வெளியிடப்பட்டது.

இளநிலை பொறியியல் படிப்புகளுக்கு இந்த ஆண்டு இரண்டு லட்சத்து 53 ஆயிரத்து தொள்ளாயிரத்து 54 பேர் விண்ணப்பித்துள்ளதாக மாநில தொழில்நுட்ப கல்வி இயக்ககம் தெரிவித்துள்ளது.

இதையடுத்து இணையதளம் வாயிலான சான்றிதழ் சரிபார்க்கும் பணி இன்று தொடங்கி இம்மாதம் 30-ஆம் தேதி வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் பத்தாம் தேதி தரவரிசைப் பட்டியல் வெளியிடப்பட்டு, கலந்தாய்வுக்கான அட்டவணையும் அன்றையதினமே வெளியிடப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

விவசாயம் மற்றும் மண்பாண்ட தொழில்களுக்கு தேவைப்படும் மண்ணை நீர்நிலைகளிலிருந்து வட்டாட்சியர் அனுமதியுடன் கட்டணமின்றி எடுத்துக் கொள்ளலாம் என முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், மண் எடுக்க விரும்புவோர் வட்டாட்சியருக்கு இணையதளம் வாயிலாக விண்ணப்பித்து அனுமதியை பெறலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை இருந்த நடைமுறையில் சிரமங்கள் இருந்ததாகவும், அதை களைய வேண்டுமென்று கோரிக்கை வரப்பெற்றதை அடுத்து புதிய நடைமுறை செயல்படுத்தப்படுவதாக அதில் கூறப்பட்டுள்ளது.

இந்த புதிய நடைமுறையின் மூலம் விவசாயிகள் தாங்கள் வசிக்கும் வட்டத்தில் உள்ள எந்த ஒரு நீர்நிலையிலும் மண்ணை எடுத்துக் கொள்ளலாம் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

குழந்தை தொழிலாளர் முறையை ஒழிக்க மக்களின் ஒத்துழைப்பு அவசியம் என மாநில தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு சி வி கணேசன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று நடைபெற்ற விழிப்புணர்ச்சி நிகழ்ச்சியில் பேசிய அவர், தமிழகத்தில் கடந்த ஓராண்டில் 346 குழந்தை தொழிலாளர்கள் மீட்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

குழந்தை தொழிலாளர்கள் இல்லாத மாநிலமாக தமிழகத்தை மாற்ற அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளதாகவும் திரு சி வி கணேசன் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் அண்மையில் 20 குழந்தை தொழிலாளர்கள் மீட்கப்பட்டுள்ளதாக மாவட்ட தொழிலாளர் நலத்துறை துணை ஆய்வாளர் திரு ராஜகோபால் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர், மீட்கப்பட்டவர்கள் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

*( சவுண்ட்பைட் - ராஜகோபால் ) – 42 செகண்ட்*

**[]<<<>>>[]**

திண்டுக்கல் மாவட்டம் பழனி அருகே விவசாயிகளை அச்சுறுத்தி, விவசாய நிலங்களை சேதப்படுத்தி வரும் யானைக் கூட்டத்தை இன்று முதல் விரட்டும் பணி தொடங்க உள்ளதாக வனத்துறை தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக விவசாயிகள் தங்களது தோட்டங்களுக்கு செல்ல வேண்டாம் என வனத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

( *வாய்ஸ்பைட் - ராஜசேகர் ) -42---- செகண்ட்*

**[]<<<>>>[]**

யுக்ரைன் மீது ரஷ்ய படைகள் நேற்று நடத்திய தாக்குதலில் 9 பேர் உயிரிழந்தனர். 29 பேர் காயம் அடைந்தனர்.

**[]<<<>>>[]**

பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு மூன்றாவது தவணையாக 330 மில்லியன் டாலர் நிதி உதவி வழங்க சர்வதேச செலாவணி நிதியம் ஒப்புதல் அளித்துள்ளது.

**[]<<<>>>[]**

லெபனான் மீது இஸ்ரேல் விமானப்படை நடத்திய தாக்குதலில் ஹிஸ்புல்லா ஆயுதக் குழுவைச் சேர்ந்த முக்கிய பிரமுகர் தலீப் அப்துல்லா கொல்லப்பட்டார்.

**[]<<<>>>[]**

அமெரிக்காவின் பால்டிமோர் நகரில் சரக்குக் கப்பல் மோதி ஆற்றுப்பாலம் சேதமடைந்ததை அடுத்து, நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நீர்வழிப் போக்குவரத்து மீண்டும் தொடங்கியது.

**[]<<<>>>[]**

காங்கோ நாட்டின் முதல் பெண் பிரதமராக ஜூடித் சுமின்வா துலுகா நேற்று பதவியேற்றுக் கொண்டார்.

**[]<<<>>>[]**

இந்திய மருத்துவ முறைகளுக்கான தேசிய ஆணையத்தின் நான்வாது நிறுவன தின நிகழ்ச்சி, மத்திய ஆயுஷ் அமைச்சக செயலாளர் திரு வைத்திய ராஜேஷ் கொட்டேச்சா தலைமையில் புதுதில்லியில் நேற்று நடைபெற்றது.

**[]<<<>>>[]**

சர்வதேச யோகா தினத்தையொட்டி நாடாளுமன்ற விவகாரங்கள் அமைச்சகத்தின் சார்பில் தில்லியில் நேற்று யோகா குறித்த பயிலரங்கம் நடைபெற்றது.

[]<<<>>>[]

இணையதள வர்த்தகத்தின் மூலம் இந்திய பொம்மைகளை பல்வேறு நாடுகளில் அதிக அளவில் சந்தைப்படுத்துதல் குறித்த பயிலரங்கம் மத்திய தொழில் மற்றும் வர்த்தக அமைச்சகம் சார்பில் புதுதில்லியில் நேற்று நடைபெற்றது.

[]<<<>>>[]

திண்டுக்கல் மாவட்டம் சங்கால்பட்டி கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் 118 பயனாளிகளுக்கு மாவட்ட ஆட்சியர் திருமதி பூங்கொடி நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

[]<<<>>>[]

தென்காசி மாவட்டம் கடையம் சார்பதிவாளர் அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்பு காவல்துறையினர் மேற்கொண்ட சோதனையின்போது கணக்கில் வராத ஒரு லட்சத்து 59 ஆயிரம் ரூபாய் பறிமுதல் செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

[]<<<>>>[]

சென்னையில் குட்கா மற்றும் தடை செய்யப்பட்ட வெளிநாட்டு சிகரெட்டுகளுக்கு எதிராக கடந்த 14 நாட்களில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளில் 63 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.,

[]<<<>>>[]

உலகக்கோப்பை டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் அமெரிக்கா-வுக்கு எதிரான ஆட்டத்தில் இந்தியா ஏழு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்று சூப்பர் எட்டு சுற்றுக்கு தகுதிபெற்றது.

நியுயார்க்கில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் பேட் செய்த அமெரிக்கா நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் எட்டு விக்கெட் இழப்புக்கு 110 ரன் எடுத்தது.

111 ரன் என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய இந்தியா 18 புள்ளி இரண்டு ஓவரில் மூன்று விக்கெட்களை இழந்து வெற்றி இலக்கை எட்டியது.

நேற்றைய ஆட்டத்தில் வெற்றிபெற்றதை அடுத்து இந்தியா சூப்பர் எட்டு சுற்றுக்கு தகுதிபெற்றது.

[]<<<>>>[]

**Perugia** சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சுமித் நாகல் காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ளார்.

இத்தாலியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், இத்தாலியின் அலசாண்ட்ரோ கியானஸியை 0-6, 7-5, 7-6 என்ற செட் கணக்கில் வென்றார்.

**[]<<<>>>[]**